## மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2015

---

மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1981 இன் 66 ஆம் இலக்க மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 10(4) ஆம் பிரிவுடன் சேர்த்து சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000–1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையில் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்படாத விடயங்கள் தொடர்பாகவும் ஐந்தொகையை தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள்

நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் முழுமையான உரிமைத்துவத்துடன் இரண்டு துணைக் கம்பனிகளான நஷனல் வெல்த் கோப்பரேஷன் லிமிட்டட் மற்றும் நற்வெல்த் செக்கியூரிட்டீஸ் லிமிட்டட் ஆகிய கம்பனிகளுடன் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2013 ஆம் ஆண்டிலிருந்து தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 50 சதவீத பங்குகளை உரித்தாகக் கொண்டிருந்த அபிவிருத்தி லொத்தர் சபையின் நிதிக்கூற்றுக்கள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதிக்கூற்றுக்களுடன் ஒன்றிணைக்கப்பட்டு தொகுதியின் கணக்குகள் தயாரிக்கப்படாதமை தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் எந்தவொரு வெளிப்படுத்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதி அறிக்கையிடலுக்கான கருத்துருக் கட்டமைப்பின் 4.56 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனமானது அதன் நிதிக்கூற்றுக்களை வரலாற்றுக் கிரய அடிப்படை அல்லது வேறு அடிப்படையின் பிரகாரம் தயாரிக்க வேண்டியதுடன் அவ் அடிப்படை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். எனினும், நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது பின்பற்றியிருந்த அடிப்படையை வெளிப்படுத்தியிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 07**

(i) நியமத்தின் 8 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கொண்டு செல்லும் தொகை நிதி நிலைமைக் கூற்றில் அல்லது கணக்குகளிற்கான குறிப்புக்களில் வகைப்படுத்தப்பட்டுக் காட்டப்பட வேண்டிய போதிலும் நம்பிக்கை பொறுப்பு நிதியம் அதற்கிணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) நியமத்தின் 31 மற்றும் 33 ஆம் பந்திகளின் பிரகாரம் நிதி இடர் முகாமைத்துவம் தொடர்பாக வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் அத்தகைய வெளிப்படுத்தல்களை மேற்கொண்டிருக்கவில்லை.

**(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01**

(i) நியமத்தின் 10(இ) பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நியமத்தின் 38 ஆம் பந்தியின் பிரகாரம் தற்போதைய காலப்பகுதியின் நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்ட அனைத்து தொகைகளிற்கும் உரிய முன்னைய காலப்பகுதி தொடர்பான ஒப்பீட்டுத் தகவல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் கணக்குகளிற்கான குறிப்புக்களில் ஒப்பீட்டுத் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) ரூபா 9,216,355,643 தொகையான நிதியத்தின் நிதிச் சொத்துக்கள் நியமத்தின் 60 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைச் சொத்துக்களாக தனித்தனியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(iv) நியமத்தின் 99 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தின் செலவினங்களின் தன்மை மற்றும் தொழிற்பாடுகளின் பிரகாரம் வகைப்படுத்தல் அடிப்படையொன்றின் கீழ் வருமான செலவினக் கணக்கு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

---

நியமத்தின் 15 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்களாக இனங்காணப்படுதவதற்கு தகைமையுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படியொன்று அதன் கிரயத்தில் கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அவை புத்தகப் பெறுமதியில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

**(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் 18**

---

நியமத்தின் 30(அ) பந்தியின் பிரகாரம் செயற்திறனான வட்டி முறையை பயன்படுத்தி வட்டி கணிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் நிதியம் அட்டுறு அடிப்படையில் வட்டிகளை கணிப்பீடு செய்திருந்தது.

**(ஊ) இலங்கை கணக்கீட்டு நியமம் 24**

---

நியமத்தின் 25 மற்றும் 26 ஆம் பந்திகளின் பிரகாரம் தொடர்புபட்ட தரப்பினருடன் மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் அவ்வாறு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(எ) இலங்கை கணக்கீட்டு நியமம் 39**

---

நஷனல் வெல்த் கோப்பரேஷன் கம்பனியால் முகாமை செய்யப்பட்ட போட்போலியோ (Portfolio) தொடர்பாக கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்ட கணக்கின் பிரகாரம் காணப்பட்ட ரூபா 3,563,932,009 திறைசேரி முறிகள், ரூபா 1,051,300,440 திறைசேரி உண்டியல்கள், ரூபா 441,106,112 மீள் விற்பனை, ரூபா 219,980,000 முன்னுரிமைப் பங்கு, ரூபா 583,723,583 தொகுதிக்கடன், ரூபா 750,136,185 சொத்து மீள் நம்பிக்கைப் பொறுப்புச் சான்றிதழ்கள், ரூபா 612,507,068 நிலையான வைப்புக்கள் மற்றும் ரூபா 262,022 தொகையான நடைமுறைக் கணக்கு மீதி என்பன நியமத்தின் 45 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியத்தின் நிதி நிலைமைக் கூற்றில் வகைப்படுத்தப்பட்டுக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. மேலும், இவ் முதலீடுகளின் பெறுமதிக் கணிப்பீட்டின் போது பின்பற்றப்பட்ட அடிப்படை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஏ) இலங்கை கணக்கீட்டு நியமம் 40**

---

இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்திற்கு (எஸ்எல்ஐஐரீ) குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குச் சொந்தமான 2005 ஆம் ஆண்டின் போது ரூபா 12,460,179 பெறுமதிக்கு கணக்கீடு செய்யப்பட்டிருந்த மாலபேயில் அமைந்துள்ள 25 ஏக்கர்கள் பரப்பளவான காணி நியமத்தின் 5 ஆம் பந்தியின் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் ஆதனமொன்றாக தனியாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதேபோல் இவ் ஆதனங்கள் தற்போதைய பெறுமதியில் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் துணைக் கம்பனிகளான நஷனல் வெல்த் கோப்பரேஷன் லிமிட்டட் மற்றும் நற்வெல்த் செக்கியூரிட்டீஸ் லிமிட்டட் என்பன மீளாய்வாண்டு தொடர்பாக முறையே ரூபா 13,500,000 மற்றும் ரூபா 100,000,000 பங்கிலாபங்களை வெளிப்படுத்தியிருந்த போதிலும் அப் பங்கிலாபங்கள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு வரையான காலப்பகுதியில் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்திடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 110,309,022 வாடகை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் துணைக் கம்பனியொன்றால் 2013 ஆம் ஆண்டிற்கு முன்னர் வழங்கப்பட்ட ரூபா 100,000,000 பெறுமதியான மிகையூதிய பங்குகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அபிவிருத்தி லொத்தர் சபை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டு தொடர்பாக சனாதிபதி நிதியத்திலிருந்து அபிவிருத்தி லொத்தர் இலாபப் பங்கொன்றாக நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு உரித்தான இலாபப் பங்கு ரூபா 819,743,344 தொகையாக காணப்பட்ட போதிலும் இது நிதிக்கூற்றுக்களில் ரூபா 721,989,070 ஆக ரூபா 97,754,274 ஆல் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

நஷனல் வெல்த் கோப்பரேஷன் லிமிட்டட்டால் முகாமை செய்யப்பட்ட மஹபொல முதலீட்டு போட்போலியோவின் (Portfolio) மீளாய்வாண்டிற்குரிய மீதி அக்கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 7,222,947,419 தொகையாகக் காணப்பட்ட போதிலும் மஹபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் அம் மீதி ரூபா 7,244,552,042 தொகையாக காணப்பட்டதனால் ரூபா 21,604,623 விளக்கமளிக்கப்படாத வேறுபாட்டைச் சுட்டிக்காட்டுகின்றது.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

சில பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்கள் தொடர்பாக பாடசாலை அபிவிருத்தி நிதியத்தால் செலுத்த வேண்டிய ரூபா 3,832,874 கூட்டுமொத்தமான செலவினம் அவை தொடர்பாக நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாமல் 2013 ஆம் ஆண்டிலிருந்து நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1981 இன் 66 ஆம் இலக்க மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 6.2 ஆம் பிரிவு | நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவரால் மீளாய்வாண்டின் போது புதிய வங்கிக் கணக்கொன்று திறக்கப்பட்டிருந்ததுடன் காசோலைகளில் கையொப்பமிடுவதற்காக நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் இரண்டு நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் மற்றும் அதிகாரச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படாத வரிசை அமைச்சின் பிரத்தியேக செயலாளர் ஆகியோரின் மாதிரி கையொப்பங்கள் வங்கிக்கு வழங்கப்பட்டிருந்தன. |
| (ஆ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் 47 ஆம் பிரிவு மற்றும் 1980 இன் 16 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 44 ஆம் பிரிவு | ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பவற்றிற்கான பங்களிப்பினை கணப்பீடு செய்த போது வாழ்க்கைச் செலவுப் படி உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக அந் நிதியத்திற்கு முறையே ரூபா 530,705 மற்றும் ரூபா 106,141 ஆல் பங்களிப்புக்கள் குறைத்து செலுத்தப்பட்டிருந்தன. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதிசார் விளைவுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 961,590,743 மிகையுடன் ஒப்பிடும் போது ரூபா 750,907,256 மிகையாக காணப்பட்டதனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 210,683,487 வீழ்ச்சியொன்றை சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களிற்கான புலமைப்பரிசில் மானியக் கொடுப்பனவுகள் ரூபா 162,237,250 ஆல் குறைவடைந்த போதிலும் முதலீட்டு போட்போலியோ வட்டி வருமானம் ரூபா 347,249,216 ஆல் குறைவடைந்தமை மேற்படி வீழ்ச்சிக்கான பிரதான காரணமாக பங்களித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 03 ஆண்டுகளினதும் நிதிசார் விளைவுகளினை பகுப்பாய்வு செய்த போது 2012 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை தளம்பல்களுடன் மிகையொன்று ஏற்பட்டிருந்தது. எனினும் நிதிசார் விளைவுகளிற்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களிற்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை மீண்டும் சீராக்கம் செய்த போது 2012 ஆம் ஆண்டின் ரூபா 688,827,839 பங்களிப்பு 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 1,086,213,752 வரை அதிகரித்திருந்த போதிலும் மீளாய்வாண்டில் அப்பங்களிப்பு ரூபா 759,207,222 வரை தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் 2012 – 2015 ஆண்டு காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தில் அடைந்துகொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் அளவு மற்றும் நிதி ரீதியாக தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்காததுடன் அதனை அடிப்படையாகக் கொண்டு செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் செயன்முன்னேற்றத்தை பரீட்சிக்க முடியாதிருந்தது.

#### 4.1.2 தொழிற்பாடும் மீளாய்வும்

மீளாய்வாண்டின் போது முதலீட்டு வைப்புக்களிலிருந்தான வட்டிகள் மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபையிலிருந்தான வருமானம் உள்ளடங்கலாக ரூபா 1,692 மில்லியன் கூட்டுமொத்த தொகையை நம்பிக்கை பொறுப்பு நிதியம் பெற்றிருந்தது. அதில் ரூபா 861 மில்லியன் தொகை அல்லது 51 சதவீதம் மாத்திரம் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நோக்கங்களில் ஒன்றான மஹபொல புலமைப்பரிசில்களை வழங்குவதற்காக செலவிடப்பட்டிருந்தது. நிதியத்தின் ஏனைய எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக மிகுதித் தொகையை பயன்படுத்துவதற்கு நிதியம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. அவ்வாறு சேமிக்கப்பட்ட பணம் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் முதலீட்டுப் பெறுமதி ரூபா 1,972 மில்லியனாக இருந்தது.

### 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பிரதான தொழிற்பாடுகளில் ஒன்றாக உள்ள இளைஞர்களிற்கு உயர் கல்வி வசதிகளை வழங்குவதற்காக புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு தொடர்பாக மாணவர்களால் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காத மஹபொல புலமைப்பரிசில்களிற்கான தவணைக் கட்டணங்கள் ரூபா 38,787,150 கூட்டுமொத்தமாக உள்ளதுடன் அதில் ரூபா 16,927,300 தொகை பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களால் 04 மாதங்கள் தொடக்கம் 07 மாதங்கள் வரையான காலப்பகுதிக்கு மேலாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் மீண்டும் நிதியத்திற்கு திருப்பியனுப்பப்பட்டிருந்தன. புலமைப்பரிசில்கள் தொடர்பாக செலுத்தப்படாத தவணைக்கட்டணங்களை தாமதமின்றி மீளப்பெறுவதில் பொருத்தமான நடைமுறையொன்றை நிதியம் பின்பற்றியிருக்காததால் அத்தகைய பணத்தை செயற்திறனான முதலீட்டில் ஈடுபடுத்தி பெறக்கூடியதாக இருந்த நலன்களை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக்கள் இழக்கப்பட்டிருந்தன.

### 4.3 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

பல்கலைக்கழகத்திற்கு உள்நுழைவதற்கான வாய்ப்புக்களை பெற்றிருக்காத மாணவர்களிற்குத் தகவல் தொழில்நுட்பத் துறையில் உயர் கல்வியை தொடருவதற்கான வழியினை வகுக்கும் நோக்கில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பங்களிப்பின் கீழ் தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தை ஸ்தாபிப்பதற்காக 1998 யூலை 08 ஆம் திகதிய 98/995/11/052 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க, நிலைமாற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இலங்கை தகவல் தொழில்நுட்ப (உத்தரவாதத்தால்) வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றை ஸ்தாபித்து நிலைமாறல் காலப்பகுதியின் இறுதியில் மொறட்டுவ பல்கலைக்கழகத்திற்கு அதனை மாற்றுவதற்கும் உள்ளூர் மற்றும் சர்வதேச வாணிப அமைச்சில் 1999 சனவரி 28

இல் இடம்பெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க, 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் ‘‘இலங்கை’’ எனும் பதம் உள்ளடங்கலாக இலங்கை தகவல் தொழில்நுட்ப (உத்தரவாதத்தால்) வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றை ஸ்தாபித்தல் மற்றும் அதற்குத் தேவையான நிதிகளையும் அதற்கான வளப் பங்களிப்பையும் வழங்குதல் என்பன மஹபொல உயர்கல்வி நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு உள்ளன.

(அ) 2003 மார்ச் 19 இல் இலங்கை தகவல் தொழில்நுட்ப (உத்தரவாதத்தால்) வரையறுக்கப்பட்ட கம்பனியுடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு சொந்தமான மாலபே பிரதேசத்தில் அமைந்துள்ள 25 ஏக்கர் காணியில் அமைந்துள்ள பல்கலைக்கழகம் 08 ஆண்டுகள் காலப்பகுதிக்கு முகாமைத்துவம் செய்வதற்காக அக்கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவ் உடன்படிக்கைக் காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னர் 2005 நவம்பர் 14 இல் மீண்டும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் இலங்கை தகவல் தொழில்நுட்ப (உத்தரவாதத்தால்) வரையறுக்கப்பட்ட கம்பனியுடன் உடன்படிக்கையை கைச்சாத்திட்டிருந்ததுடன் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு சாதகமாக இருந்த ஆரம்ப உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்ட பின்வரும் நிபந்தனைகள் நீக்கப்பட்டோ அல்லது திருத்தப்பட்டோ உள்ளது.

**நீக்கப்பட்ட நிபந்தனைகள்**

-------------------------------------------------------------

(i) 4(உ) பிரிவு - மகாபொல பல்கலைக்கழகத்தின் அனைத்து சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தின் (எஸ்எல்ஐஐரீ) ஏனைய கிளைகளின் ஸ்தாபிப்பிற்கு அல்லது நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நோக்கங்களுக்கு முரணாக ஏனைய வர்த்தக நோக்கங்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பயன்படுத்தப்படக்கூடாது.

(ii) 4(ஏ) பிரிவு - பல்கலைக்கழகத்தின் மேம்பாட்டிற்காக கருதும் அனைத்து தொழிற்பாடுகளும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் இணக்கப்பாட்டுடன் நிறைவேற்றப்படல் வேண்டும்.

(iii) 4(ஐ) - கல்விசார் பாடநெறிகளினை நடாத்துவதனூடாக வருமானத்தை சேகரித்தல் மற்றும் பல்கலைக்கழகத்தின் முன்னேற்றத்திற்கு அவசியமான செலவினத்தை மேற்கொள்ளுதல் என்பன இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தின் (எஸ்எல்ஐஐரீ) பொறுப்பொன்றாகக் காணப்படும்.

(iv) 4(கி) - நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் தேசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (என்டீபீ) கணிசமான கடன் தொகையொன்றினை பெற்றுக்கொண்டது என்ற உண்மையினை இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம் (எஸ்எல்ஐஐரீ) அறிந்திருக்க வேண்டியதுடன் அது சிறந்த நிதிசார் நம்பிக்கைத் தன்மையை பெற்றிருக்கும் போது தவணைப் பணங்களை தீர்ப்பனவு செய்வதற்கு ஒவ்வொரு சாத்தியமான முயற்சியினையும் மேற்கொள்வதை இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம் (எஸ்எல்ஐஐரீ) உறுதிப்படுத்துதல்.

(v) 4(கீ) - பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவத்தினை பேணுதல் மற்றும் அதன் கணக்குகளினை மதிப்பீடு செய்து பரீட்சிப்பதற்கு தகுதிவாய்ந்த முகாமையாளர்கள் மற்றும் கணக்காய்வாளர்களை உள்ளடக்கிய சுதந்திரமான அமைப்பொன்றை நியமிப்பதற்கும் எதிர்காலத்தில் அறிமுகப்படுத்துவதற்கு வாய்ப்பாக இருக்கக்கூடிய புதிய பாடநெறிகளினை மதிப்பிடுவதற்காக தகைமைவாய்ந்த தேர்ச்சிபெற்ற திறமையான தனிநபர்கள் குழுவொன்றை நியமிப்பதற்கும் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை உரிமையைக் கொண்டிருத்தல்.

(vi) 4(கு) பிரிவு - நம்பிக்கைப் பொறுப்பாளரின் தீர்மானத்தினைத் தொடர்ந்து மாலபே பல்கலைக்கழகம் ''மஹபொல கம்பஸ்'' என பெயரிடப்படுதல் கேட்போர்கூடம் ''லலித் அதுலத்முதலி கேட்போர்கூடம்'' என பெயரிடப்படுதல் மற்றும் தொடர்புடைய பெயர்ப் பலகைகள் வளாகத்தில் தெளிவாக காட்சிப்படுத்தப்படுதல்

(vii) 4(கெ) - செல்லுபடியாகும் காலப்பகுதி முடிவடைதல் காரணமாக அல்லது வேறு வழியில் இவ் உடன்படிக்கை முடிவுறுத்தப்படும் போது நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் நிதியிடப்பட்ட சொத்துக்கள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் ஆதனங்களாக காணப்பட வேண்டும்.

**திருத்தப்பட்ட நிபந்தனைகள்**

---

(viii) 2003 மார்ச் 19 ஆந் திகதிய சட்டரீதியான உடன்படிக்கையின் 4(கா) பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளான ''இணங்கப்பட்டிருந்த முகாமைத்துவக் கட்டணத்தை கழித்ததன் பின்னர் பல்கலைக்கழகத்தின் நடவடிக்கைகள் ஊடாக உருவாக்கப்பட்ட வருமான மிகை அடுத்துவரும் ஆண்டின் யூன் 30 இற்கு முன்னர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும் என்பதும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் முன் அங்கீகாரமின்றி ஏனைய முதலீடுகள் எதுவும் மேற்கொள்ளப்பட முடியாது என்பதும் எவ்வாறாயினும், பல்கலைக்கழகத்தின் எதிர்கால அபிவிருத்திக்காக ஒதுக்கீட்டுக் கணக்கொன்றை பேணுவதற்காக இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தின் (எஸ்எல்ஐஐரீ) பணிப்பாளர் சபையினால் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் அனுமதி கோரப்பட முடியும் என்பதும் அத்துடன் அவ்வாறான அபிவிருத்தி நடவடிக்கைகளிற்கு தேவையான பணம் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் இவ் ஒதுக்கக் கணக்கிலிருந்து வழங்கப்பட முடியும் என்பதும்'' என்பவற்றிற்கு பதிலாக நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குச் சொந்தமான காணி குத்தகை அடிப்படையில் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்திற்கு (எஸ்எல்ஐஐரீ) வழங்கப்படும் வகையில் புதிய உடன்படிக்கை ஊடாக திருத்தம் செய்யப்பட்டு உடன்படிக்கையின் 5(அ)(i) ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த குத்தகையாக ரூபா 8 மில்லியன் அல்லது இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தின் (எஸ்எல்ஐஐரீ) வருடாந்த தேறியலாபத்தில் 20 சதவீதமான பெறுமதி இரண்டிலும் ஆகக்கூடிய பெறுமதி செலுத்தப்பட வேண்டும் என இணங்கப்பட்டது.

(ix) நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம் என்பவற்றுக்கிடையே 2003 மார்ச் 19 இல் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் 4(க) பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகள் மீது பரிந்துரைப்பதற்கான அதிகாரம் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் பல்கலைக்கழகத்தின் மேம்பாடு தொடர்பான அனைத்து அளவீடுகளும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் ஒத்துழைப்பின் கீழ் எடுக்கப்பட வேண்டும். எனினும், நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கிடையே (எஸ்எல்ஐஐரீ) 2005 நவம்பர் 14 இல் கைச்சாத்திடப்பட்ட இரண்டாவது உடன்படிக்கையின் 4(உ) மற்றும் (ஊ) பிரிவுகளின் பிரகாரம் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவக (எஸ்எல்ஐஐரீ) நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அதன் பணிப்பாளர் சபையால் எடுக்கப்பட்ட தீர்மானங்களிற்கிணங்க பல்கலைக்கழக செயற்பாடுகளை மேற்கொள்ளுதல், அதற்கு இணங்க சுற்றறிக்கைகளை தயாரித்தல், பரீட்சைகளிற்கான தயார்படுத்தல், மாணவர்களை சேர்த்துக் கொள்ளுதல், கல்விசார் பதவியணியினரை சேவையீடுபடுத்துதல்,

முகாமை செய்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் பராமரிப்பு போன்ற செயற்பாடுகள் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தின் (எஸ்எல்ஐஐரீ) பணிப்பாளர் சபையால் தீர்மானிக்கப்பட்டவாறு மேற்கொள்ளப்பட வேண்டிய அதேநேரம் பிரதான நிர்மாணங்கள் மாத்திரம் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் அங்கீகாரத்தின் கீழ் மேற்கொள்ளப்படுவதற்கு இணங்கப்பட்டிருந்தது.

(ஆ) எஸ்எல்ஐஐரீ இன் சார்பில் செலவினங்களாக ஏற்பட்ட முதலீட்டின் பெறுமதிக்கு பொருத்தமான ரூபா 373,579,392 தொகையை மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் மீளப்பெற்றிருந்தது. நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திடமிருந்து சுயாதீனமான நிறுவகம் ஒன்றாக இலங்கை தகவல் தொழில்நுட்ப (உத்தரவாதத்தால்) வரையறுக்கப்பட்ட நிறுவகத்தை ஸ்தாபிப்பதற்காகவும் எஸ்எல்ஐஐரீ நிர்மாணிக்கப்பட்டிருந்த குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட காணியின் சார்பிலும் இலங்கை தகவல் தொழில்நுட்ப (உத்தரவாதத்தால்) வரையறுக்கப்பட்ட நிறுவகத்துடன் 2015 மே 12 இல் இரண்டு உடன்படிக்கைகளை நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் கைச்சாத்திட்டிருந்தது.

மேற்படி இரண்டு உடன்படிக்கைகளின் மூலம் 2003 மார்ச் 19 இல் கைச்சாத்திடப்பட்ட மூல உடன்படிக்கை மற்றும் 2005 நவம்பர் 14 இல் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு சாதகமான நிபந்தனைகள் மேலும் நீக்கப்பட்டு பின்வரும் புதிய நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(i) நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டுப் பெறுமதியான ரூபா 373,579,392 தொகை மற்றும் மஹபொல பெயரில் வழங்கப்பட்ட புலமைப்பரிசில் பெறுமதி மற்றும் ஏனைய இடைநேர் செலவினங்களை மேவுகை செய்வதற்காக நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திற்கு ரூபா 408,500,000 தொகை வழங்கப்படுதல் என்பதும் அதன் பின்னர் மஹாபொல நிதியம் மற்றும் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்திற்கிடையே எந்தவொரு நிதிக் கட்டுப்பாடும் காணப்படாது என்பதும் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம் மஹபொல நிதியத்திடமிருந்து சுயாதீன நிறுவகமொன்றாக தொழிற்படும் என்பதும் ஆகும்.

(ii) இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம் எந்தவொரு கணக்கீட்டு நியமத்திற்கும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்திற்கும் அல்லது சர்வதேச கணக்கீட்டு நியமங்களிற்கு உட்படுத்தப்பட்டிருக்காததுடன் மஹபொல நிதியத்திற்கு கணக்கீட்டு பதிவேடுகளை சமர்ப்பிப்பதற்கு அல்லது 2015/2016 ஆம் ஆண்டிலிருந்து கணக்குகளை ஒன்றிணைப்பதற்கு தேவைப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதும்

(iii) இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மாலபேயில் அமைந்துள்ள காணி 5 ஆண்டுகளிற்கு ஒவ்வொரு தடவையும் வருடாந்த குத்தகையை அதிகரிக்கும் அடிப்படையில் 2015 மே 15 தொடக்கம் 2075 மே 14 வரையான 60 ஆண்டு காலப்பகுதிக்காக குத்தகைக்கு வழங்கப்படுதல் என்பதும் 2020 மே 14 இல் முடிவடையும் 5 ஆண்டுகளிற்காக வருடாந்தம் ரூபா 20 மில்லியன் விலை வீதத்திலும் 2070 மார்ச் 15 தொடக்கம் 2075 மார்ச் 14 வரையான 05 ஆண்டுகளிற்காக வருடாந்தம் ரூபா 40 மில்லியன் விலைவீதத்திலும் குத்தகையை செலுத்துவதற்கான பொறுப்பை ஏற்படுத்துகின்றது என்பதும்

(iv) மஹபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு சொந்தமான இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்ட மாலபேயில் அமைந்துள்ள காணி அல்லது அதன் பகுதியொன்று

உபகுத்தகைக்கு வழங்கப்பட்டு ஈடுவைப்பதற்காக மஹபொல நிதியத்தில் எந்தவொரு எழுத்து மூலமான அனுமதியும் தேவைப்படவில்லை என்பதும்.

(v) இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்திற்கு அவர்களின் செலவினத்தில் உரிய காணி வளாகத்தில் கட்டிடங்களை நிர்மாணித்தல், இயந்திரம் மற்றும் உபகரணங்களை நிறுவுதல் அல்லது காணி புனரமைப்பு, மேம்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் என்பவற்றிற்காக அனுமதி வழங்கப்படும் என்பதும் ஆகும்.

(இ) 2005 நவம்பர் 14 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2015 மே 12 வரை அறவிடப்பட வேண்டிய ரூபா 98,642,356 நிலுவையாகவுள்ள குத்தகை வாடகை காணப்பட்ட போது 2015 மே 12 இல் கம்பனியுடன் புதிய உடன்படிக்கையை நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் கைச்சாத்திட்டிருந்தது. 2005 நவம்பர் 14 ஆந் திகதிய மூல உடன்படிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பெற்றுக்கொள்ளப்படக் கூடியதாக இருந்த ரூபா 45,358,379 குத்தகை வாடகை புதிய உடன்படிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம் ரூபா 20,000,000 வரை குறைவடைந்திருந்தது.

(ஈ) 2015 மே 12 இல் மேற்குறிப்பிடப்பட்டவாறு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னரும் மீளாய்வாண்டில் மஹபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தில் மேற்கொள்ளப்பட்ட முதலீடாக ரூபா 1,064,520,695 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களினுள் நிதிக்கூற்றுக்களுடன் வரைபு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2015 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மே 08 இலேயே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 133 மற்றும் 2009 யூன் 09 ஆம் திகதிய டிஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியத்திற்கான உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்காததுடன் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவினாலும் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 5.3 பெறுகை மற்றும் ஒப்பந்தச் செயன்முறை

#### 5.3.1 பெறுகை

1981 இன் 66 ஆம் இலக்க மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 6(2)(ஈ) பிரிவின் பிரகாரம் நிதியத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு தேவையான பணத்தை சேகரிக்கும் நோக்கில் 2013 யூலை 11 ஆந் திகதிய 13/0773/54/008 ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரம் மீது 2013 யூலை 30 இல் ‘‘ஒன்லைன் சீட்டிழுப்பு’’ மீள அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒன்லைன் சீட்டிழுபபை பேணுகின்ற சாத்தியதன்மை 02 பாராளுமன்ற அதிகாரச்சட்டங்களின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்ட தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபை என்பவற்றினூடாக இச்சீட்டிழுப்பை மேற்கொள்வற்கு முடியுமா என்பது தொடர்பாக கவனத்தில் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தால் தனியார் நிறுவனமொன்றின் மூலம் சீட்டிழுப்பை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முதலாவது மற்றும் இரண்டாவது கட்டங்களின் கீழ் ரூபா 6 பில்லியன் முதலீடு செய்வதன்மூலம் சீட்டிழுப்பை அமுல்படுத்துவதற்காக முதலீட்டாளர் ஒருவரை தெரிவு செய்வதற்காக ஐந்து உறுப்பினர்களை உள்ளடக்கி ‘‘மஹபொல லொத்தர் குழு’’ என அழைக்கப்பட்ட விசேட குழுவொன்று கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சரால் மேற்கொள்ளப்பட்ட முன்மொழிவின் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையால் 2012 யூலை 12 இல் நியமனம் செய்யப்பட்டிருந்தது. எனினும் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.7.2(ஆ) வழிகாட்டலின் பிரகாரம் பெறுகை மதிப்பீட்டுக் குழு நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.3.1 ஆம் வழிகாட்டலிற்கு முரணாக கேள்விகளை கோருவதற்கு நியமக் கேள்வி ஆவணங்கள் பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் அதேபோல் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவும் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. இதனால் பயன்படுத்தப்பட்ட கேள்வி ஆவணங்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்றால் சரிபார்க்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6.2.2 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் கேள்விகளை சமர்ப்பிப்பதற்காக ஆகக்குறைந்தது 21 நாட்கள் காலப்பகுதி அனுமதிக்கப்பட வேண்டிய போதிலும் 3 கேள்விகள் மாத்திரம் 10 நாட்கள் மாத்திரமே வழங்கப்பட்டு பெறப்பட்டிருந்தன.

(iv) கேள்வி மதிப்பீட்டுக் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டிருக்காததால் விரிவான கேள்வி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக லொத்தர் குழு கேள்விகளை மாத்திரம் ஒப்பீடு செய்திருந்தது. பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.3.2 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் கேள்வி கோரல் வேண்டப்படுகின்ற போது தகுதியை கொண்டிருத்தல் மற்றும் தகைமை தேவைப்பாடுகள் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் அத்தேவைப்பாடு உள்ளடக்கப்படாமல் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் தெளிவாக இருக்கவில்லை என குறிப்பிட்டு சமர்ப்பிக்கப்பட்ட 03 கேள்விகளில் ஒன்று நிராகரிக்கப்பட்டிருந்தது.

(v) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 7.12 ஆம் பிரிவின் பிரகாரம் ஆக்கபூர்வமான போட்டித்தன்மை காணப்படாதமை தெளிவான சான்றாக காணப்படும் போது பெறப்பட்ட அனைத்து கேள்விகளும் நிராகரிக்கப்படுவதை நியாயப்படுத்த முடியும். எனினும் அவ்வாறு செய்யப்படாமலும் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 7.10 ஆம் பிரிவிற்கு முரணாகவும் ஏனைய வளங்கள், நிதி நிலைமை மற்றும் அனுபவத்தை கருத்திற்கொள்ளாமல் முதலீட்டை மேற்கொண்டிருந்த கேள்வியாளர் ஒருவரை மதிப்பீடு செய்வதற்குப் பதிலாக ரூபா 6 பில்லியன் பெறுமதியான கேள்வியை சமர்ப்பித்திருந்த கம்பனியொன்றின் பிரதான முதலீட்டாளர் ஒருவராக உள்ள வெளிநாட்டவர் ஒருவர் மதிப்பீட்டிற்குட்படுத்தப்பட்டிருந்தார். மேலும், சீட்டிழுப்பை நடாத்துவது கம்பனி பதிவு செய்த நோக்கமொன்றாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(vi) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் பிரிவின் பிரகாரம் பெறுகை நிறுவனத்தால் முறையான ஒப்பந்த உடன்படிக்கை தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் உடன்படிக்கையை தயாரித்திருந்தார். ஆகையால், ''மஹபொல சீட்டிழுப்பை நடைமுறைப்படுத்துவதற்கான பூர்வாங்கச் செயற்பாடுகளிற்கான வழிகாட்டியின்'' 6, 8, 9, 14, 15, 16, 17 மற்றும் 20 இல் குறிப்பிடப்பட்ட விடயங்கள் உடன்படிக்கையிலிருந்து நீக்கப்பட்டிருந்தன. இதனால் சீட்டிழுப்புச் செயற்பாடுகள் மற்றும் செயலாற்றலில் வெளிப்படைத்தன்மை காணப்படவில்லை.

(vii) ஒப்பந்த உடன்படிக்கையின் 7.1(ஆ) பிரிவின் பிரகாரம் காலாண்டின் முதலாம் திகதியில் அல்லது அதற்கு முன்னர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு ஒப்பந்தகாரர் தவணைப்பணத்தை செலுத்த வேண்டும். அவ்வாறு செய்யத் தவறும் போது 90 நாட்கள் காலப்பகுதியினுள் இது தொடர்பில் ஒப்பந்ததாரரிற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட வேண்டியதுடன் அத்திகதியிலிருந்து 14 நாட்களினுள் உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட வேண்டும். 2015 மே 05 இலிருந்து கொடுப்பனவுகள் செலுத்தத் தவறியிருந்த போதிலும் அது தொடர்பாக ஒப்பந்ததாரரிற்கு எழுத்து மூலம் நம்பிக்கைப் பொறுப்பு அறிவித்திருக்கவில்லை. உரிய உடன்படிக்கை 2015 ஆகஸ்ட் 05 இலிருந்து 14 நாட்களினுள் முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அது முடிவுறுத்தப்பட்டிருக்காததுடன் அத்திகதியிலுள்ளவாறான நிலுவை தவணைப்பணம் ரூபா 375,000,000 ஆக இருந்தது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் நிதியத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) உள்ளகக் கட்டுப்பாடு | கணக்காளர் பதவிக்காக உத்தியோகத்தரொருவர் ஆட்சேர்ப்புச் செய்யப்படாமை. |
| (ஆ) நிதிக் கட்டுப்பாடு | உரிய அங்கீகாரம் இன்றி முதலீடு செய்தல் மற்றும் முதலீட்டு நலன்கள் மதிப்பீடு செய்யப்படாமை. |
| (இ) பெறுகை | பெறுகை வழிகாட்டல்கள், பெறுகைக் கைநூல் மற்றும் பெறுகைத் திட்டங்களிற்கு இணங்க நடவடிக்கைகள் எடுக்கப்படாமை. |